# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

நவம்பர் 2008 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 1 இதழ் 6


அன்புள்ள சகோதர சகோதரிகளே,

2008 ஆண்டிற்கான எக்கோஸ் இந்தியா செய்திக்கடிதத்தின் இறுதி இதழுக்கு உங்களை வரவேற்கிறோம். நம் மிஷனின் செய்திகளைத் தொகுத்து, அதை எட்டு மண்டல மொழிகளில் மொழி பெயர்த்து வழங்கிய செய்திக்குழுவிற்கு இது ஒரு நிறைவான வருடம். மொழிபெயர்ப்பு குழுக்களின் முழுமனதான ஒத்துழைப்பின்றி செய்திமடலை குறித்த நேரத்தில் வெளியிட்டிருக்க முடியாது. மிகுந்த உற்சாகத்துடன் செயல்படும் செய்தி சேகரிக்கும் தன்னார்வலர்கள், மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மண்டல பொறுப்பாளர்கள் ஆகியோரால் எங்களுக்கு நிறைய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

நவம்பர் இதழில் தமிழ்நாடு, சைனா, ஆந்திர பிரதேசத்தில் மாஸ்டரின் பயணம் குறித்த தகவல்கள் உள்ளன. நாடு முழுவதும் பல கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் நடந்த கட்டுரைப் போட்டி, பயிற்சி வகுப்புகள், பொது அரங்குகள் (Open House) மற்றும் VBSC ___ போன்ற செய்திகுறிப்புகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன.

2009-ஜனவரி இதழுக்கான செய்திகட்டுரைகள் 15 டிசம்பர் 2008-க்குள் எங்களுக்கு கிடைக்க பெறுமாறு அனுப்ப வேண்டும். செய்தியையும் நிகழ்ச்சியின் சில புகைப்படங்களையும் உங்களுடைய மண்டல பொறுப்பாளர் (Zonal-In-Charge) மூலம் எங்களுக்கு அனுப்புங்கள்.

எக்கோஸ் இந்தியா செய்திமடல் குழு

## மதுரைக்கு ஒரு நினைவூட்டும் வருகை



மாஸ்டர் அவர்கள் 30-ஆகஸ்ட் அன்று மாலை, திருச்சியிலிருந்து மதுரை ஆசிரமத்திற்கு வந்தார். சென்னை மற்றும் திருப்பூர் மையங்களை அடுத்து, மதுரை தமிழ்நாட்டின் மிகபெரிய மையமாகும். இங்குள்ள ஆசிரமம் மூன்று ஏக்கர்களில் உள்ளது. நிரந்தரமென்று சொல்லகூடிய தியான மண்டபத்தில் 2000 அப்யாசிகள் அமரலாம். மதுரைக்கு தெற்கேயுள்ள அனைத்து மையங்களிலிருந்தும் அப்யாசிகள் வார இறுதியில் மாஸ்டருடன் இருப்பதற்காக வந்திருந்தார்கள். டெலிகேட் (Delegate) கார்டில், 'மாஸ்டரின் அன்பில் திளைத்திருத்தல்' என்ற கருத்து அச்சடிக்கப்பட்டிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை 31-ஆகஸ்ட் அன்று கூட்டு தியானத்திற்கு பிறகு மாஸ்டர் சரளமாக தமிழில் 30 நிமிடங்கள் உரையாற்றினார். குடும்ப வாழ்க்கை மற்றும் ஆன்மீகத்தைப் பற்றி பேசினார். பெண்கள் கணவனின் கையை பிடித்துக்கொள்ள வேண்டும். ஆனால் மாஸ்டரை இதயத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார். மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு கோபம், சந்தேகம், பொறாமை ஆகிய மூன்றிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். பூமியில் வீடுகள் கட்டுவதில் மிகுந்த ஈடுபாடு இருக்கக் கூடாது. இறுதியாக நம் வீடு நமக்குள் இருக்கிறது என்பதை நினைவுகொள்ள வேண்டும் என்று மாஸ்டர் கூறினார்.

மலரும் நினைவுகளாக மாஸ்டர் அவர்கள், மதுரையில் தனது திருமணம் நடந்த திருமண மண்டபத்திற்கு சென்றார். கூட்டு தியானம் நடைபெற்று வந்த வாலம்ஜி மேன்ஷனுக்கும் சென்றார். மாஸ்டர் அவர்கள் TTK நிறுவனங்களில் பணிபுரிந்த பொழுது இங்கு தனது வருகைகளை நினைவு கூர்ந்தார்.

விருதுநகரின் அருகில் உள்ள சின்னவள்ளிக்குளம் ஆசிரமத்திற்கு சென்று அங்குள்ள உள்ளூர் அப்யாசிகளுடன் ஓய்வாக சிறிது நேரம் இருந்தார். "நான் எப்போது இங்கே வந்தாலும் நன்றாக உறங்குவேன்" என்று கூறினார். பாபூஜி மஹராஜ் அவர்கள் விருதுநகர் வந்திருந்த பொழுது எடுத்த பழைய புகைப்படங்களை மாஸ்டர் பார்த்தார். குழுவாக எடுக்கப்பட்ட புகைப்படத்தில் இருந்து அப்யாசிகளை அடையாளம் காட்டினார். விருதுநகரில் TTK நிறுவனத்தில் அவருடன் பணி புரிந்தவர்களில் பெரும்பாலானோர்கள் இறந்துவிட்டதை அறிந்து மிகவும் வருத்தமடைந்தார். வழக்கம்போல் மாஸ்டர் அவர்கள் தினமும் பல அப்யாசிகளை சந்திப்பதற்கும், அவர்களின் தனிபட்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கும், அவர்களின் பிரச்சனைகளை கேட்பதற்கும் நேரம் ஒதுக்கினார். செப்டம்பர் 3-ஆம் தேதி மாஸ்டர் அவர்கள் சென்னைக்கு கிளம்பி சென்றார்.








## சீனாவிற்கு மாஸ்டரின் வரலாற்றுப் புகழ்மிக்க வருகை

(16-23 செப்டம்பர், 2008)

மாஸ்டர் அவர்கள் ஷாங்காய் புடங் (Shangai Pudong) பன்னாட்டு விமான நிலையத்திற்கு வந்தார். Immigiration Clearance முடித்தபின் காரில் அமரும்போது "நாம் சைனாவிற்கு வந்துவிட்டோம் பார்த்தீர்களா" என்றார். உள்ளூர் அப்யாசிகளும், வெளிநாடுகளிலிருந்து சிறிய அளவில் வந்திருந்த சீன அப்யாசிகளும் மாஸ்டர் தங்கியிருந்த கிரீன் கோர்ட்டில் வரவேற்பு விருந்து கொடுக்கக் காத்திருந்தார்கள். அவர் உடனடியாக சிட்டிங் கொடுப்பதாக கூறினார். அவர் "பெய்ஜிங் (Beijng) ஒலிம்பிக்ஸ் போல வானவேடிக்கைகளை ஆரம்பித்து தீபம் ஏற்றுவோம் என்றார். அறையிலிருந்த அனைவரும் அப்யாசிகளா என்று விசாரித்தார். பின்பு அது தேவையில்லை எப்படியும் சைனா முழுவதும் தான் பிராணாஹூதி அளிப்பதாக கூறினார்.

"இதயத்தின் மொழி" என்ற கருத்தில் மூன்று நாள் கருத்தரங்கை மாஸ்டர் அவர்கள் நடத்தினார். சுமார் 40 அப்யாசிகளுடன் மாஸ்டர் இடங்களை சுற்றி பார்க்கவும், கடைகளுக்கும் சென்றார். சில நேரங்களில், உணவிற்கு பிறகும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். சைனாவைப் பற்றி பேசும் பொழுது அவர் சீன அப்யாசிகளை ஆசிர்வதிப்பதாகவும், இப்பொழுது விதைத்துள்ள விதைகள் எதிர்காலத்தில் ஒரு நல்ல அறுவடையைக் கொடுக்கும் என்று நம்புவதாகவும் கூறினார். அவர் குறிப்பாக சைனாவில் ஷான்சி (Shaanxi) மாகாணத்திலுள்ள ஸியான் (Xi'an) என்ற ஊரிலிருந்து சகஜ மார்க்கம் வளரும் என்று கூறினார்.

SRCM

# எக்கோஸ் இந்தியா

நவம்பர் 2008 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 1 இதழ் 6





கருத்தரங்கில், மாஸ்டர் அவர்கள் குறிப்பாக சீன மக்களுக்காகக் பேசினார். அவர் சொன்னதிலிருந்து-

‘நாடுகள், மதம் போன்றவற்றால், நாம் நம்மை வேறுபடுத்திக் கொள்கிறோம். கடவுள் இந்த வேற்றுமைகளை உருவாக்கவில்லை. மனித குலத்தையும், அன்பையும் தவிர கடவுள் வேறு எதையும் உருவாக்கவில்லை.

நம்மிடம் எதிர்பார்க்கப்படுவது என்னவென்றால், நாம் முதலில் விலங்கு தன்மையற்ற முழுமையான மனிதனாவது.

பின்பு முழுமையான மனிதனாக மற்றவர்களுக்கு உதவுவதாகும். உங்கள் முன் சரியான தேர்வை வைப்பதற்காக நாங்கள் வந்திருக்கிறோம். சரியானதைத் தேர்ந்தெடுத்து உங்கள் வாழ்க்கையில் கொண்டு செல்லவும், நீங்கள் தொலைத்த உங்கள் உட் சுதந்திரதைத் திரும்ப பெறுவதற்காகவும் உங்களுக்கு உதவுகிறோம்.

"நாம் அவருக்கு உண்மையாக பணி புரிய தயாராக இருக்கிறோமா? அதற்கான தகுதிகள்-CAD: அற்பணிப்பு (Commitment), செயல்முறைப்படுத்துதல் (Application), & வைராக்கியம் (Determination)"

- பி. ராஜகோபாலச்சாரி, சீனா 2008

## மாஸ்டரின் ஐதராபாத் வருகை

சனிக்கிழமை 11-அக்டோபர்-2008 அன்று மாஸ்டர் சென்னையிலிருந்து வந்தார். ஆயிரக்கணக்கான அப்யாசிகள் ஆசிரமத்தின் முன் வாசலிலிருந்து, மாஸ்டர் குடில் வரை ஒழுங்கான முறையில் அமைதியாக நின்று மாஸ்டரை வரவேற்றனர். மாலை தியான மண்டபத்தில் மாஸ்டர் கூட்டு தியானம் அளித்தார். ஆந்திர பிரதேசத்தின் பல பகுதிகளிலிருந்து வந்த அப்யாசிகளை இந்த வருகையின் போது மாஸ்டர் சந்தித்தார். மிஷனின் பல நிர்வாக விஷயங்களைப் பற்றி கலந்துரையாடினார். அவர் நான்கு பிரிசெப்டர்களை (Prefects) தயார் செய்தார். அவர் மகிழ்ச்சியாகவும், ஓய்வாகவும் இருந்தார்.

ஞாயிற்றுக்கிழமை 12-ஆம் தேதி அன்று, காலை கூட்டு தியானம் முடிந்தபின் மாஸ்டர் மூன்று திருமணங்ளை நடத்திவைத்தார். இதைத் தொடர்ந்து மாஸ்டர் உரையாற்றினார். மாஸ்டரின் உரையிலிருந்து இரண்டு முக்கியமான விஷயங்கள்

1. மாஸ்டர் என்னை எவ்வளவு அனுமதிக்கிறாரோ, அதைவிட அதிகமாக என்னால் செய்ய முடியாது.

2. அவர் எதை செய்வதற்கு அனுமதிக்கிறாரோ அதை செய்வதற்கு எனக்கு சக்தியும் மனவுறுதியும் இருக்க வேண்டும்.

3. அந்த வேலையை அனுமதித்து, அதன் பயனை நீங்கள் பெறுவதற்குமான உங்கள் ஒத்துழைப்பே மூன்றாவதும், மிக முக்கியமானதுமாகும்.

ஒத்துழைப்பு என்றால் சகஜ மார்க்கத்தின் பத்து நியமங்களின்படி வாழ்வது, இடைவிடாத பயிற்சி, உள்ளும் புறமும் ஒழுக்கம், லௌகீக ஆன்மீக ஒழுக்கம், வீட்டிலும் வெளியுலகிலும் ஒழுக்கம், மற்றும் மிக முக்கியமானதுமான எண்ணங்களை ஒழுங்குபடுத்தும் ஒழுக்கம்.





ஏனென்றால் எல்லா பிரச்சினைகளுக்கும் காரணம் அங்குதான் உள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மதியம் நடந்த பிரிசெப்டர்கள் கூட்டத்தில் 125-க்கும் அதிகமான பிரிசெப்டர்கள் கலந்து கொண்டார்கள். இதில் அதிகமானோர் ஆந்திர பிரதேசத்தை சேர்ந்தவர்கள். அக்டோபர் 8-ஆம் தேதி அன்று மாஸ்டர் அளித்த அருட்செய்தி குறித்தும், காலையில் அவர் ஆற்றிய உரை குறித்தும் பிரிசெப்டர்கள் ஆய்ந்து ஆலோசிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

மாஸ்டர் பிரிசெப்டர்களுக்கு உரையாற்றி கூட்டு தியானமும் அளித்தார். அவருடைய வேலை முன்னதாகவே முடிந்து விட்டதால் அவர் ஒரு நாள் முன்னதாக புறப்பட முடிவு செய்தார். திங்கட்கிழமை தோமல்குடா ஆசிரமம் புறப்பட்டார். ஐந்து வருடங்களுக்கு பிறகு மாஸ்டர் இந்த ஆசிரமத்திற்கு வருகை தந்தார். மாலை கூட்டு தியானத்தை அளித்துவிட்டு, இரவு ஆசிரமத்தில் தங்கினார். செவ்வாய்கிழமை காலை மாஸ்டர் கொல்கொத்தா புறப்பட்டு சென்றார்.





## நற்பண்புகளும் நல்லொழுக்க நெறிமுறைகளும்

### அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

இரண்டு மணி நேர சொற்பொழிவு மற்றும் வினாடி-வினா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 6 ஆசிரியர்கள், ப்ரின்டிங் டெக்னாலஜி பிரிவை சேர்ந்த 125 என்ஜினீயரிங் மாணவர்கள் கலந்துகொண்டனர். சகோ. A.P.துரை, இணை செயலாளர், ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன், 'நற்பண்பாலும், நல்லொழுக்க நெறியாலும் இலக்கின் பாதை அமைக்கப்பட்டுள்ளது' என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் இத்தலைப்பு குறித்து சகஜ மார்க்கத்தின் பார்வையையும் மாஸ்டரின் ஆய்வுகளையும் அவ்வப்போது வழங்கினார். "நற்பண்பு என்பது உங்களையும், மற்றவர்களையும் பொறுத்தது. நல்லொழுக்க நெறி என்பது உங்களைப் பொறுத்தது. பௌதீகமாகவோ, மனரீதியாகவோ, ஆன்மீகமாகவோ உங்களை சேதப்படுத்தும்படியாக எதையும் நினைக்கவும் செய்யவும் கூடாது"

பல மாணவர்கள் மாஸ்டரைப்பற்றியும், மிஷனைப்பற்றியும் கேள்விகள் கேட்டனர். சிலர் பாபுஜி மெமோரியல் ஆசிரமத்திற்கு வர ஆர்வம் காட்டினர். புதிய அப்யாசியான மூத்த விரிவுரையாளர் திரு. கே. விபினேந்தரன், இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்.





## பப்ளிகேஷன்ஸ் - புதிய வெளியீடுகள்




மாஸ்டரின் இரண்டு தமிழ் சொற்பொழிவுகள் அடங்கிய குறுந்தகடு ( DVD ) தீபாவளி அன்று வெளியிடப்பட்டது.

அ. திருப்பூர் தியான மண்டப திறப்பு விழா - மார்ச் 2, 2008 - 25 நிமிடங்கள்.

ஆ. மதுரையில் மாஸ்டர் அளித்த சொற்பொழிவு - ஆகஸ்ட், 31, 2008 - 20 நிமிடங்கள்

## ஆஷ்ரயா - முதியோர்களுக்கான இல்லம்

மாஸ்டரின் ஆசியால், ஆஷ்ரயா - முதியோர்களுக்கான இல்லத் திறப்பு விழாவில் 250 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இந்த முயற்சி ஒரு அப்யாசி சகோதரரால் உருவாக்கப்பட்டது.

விழா காலை 7 மணிக்கு துவங்கியது. திருப்பூரிலிருந்து சில அப்யாசிகள் வந்திருந்தனர். கூட்டு தியானதிற்கு பிறகு 'சமுதாயத்தின் மீது சகஜ மார்கத்தின் பார்வை' மற்றும் 'முதியோர்களை கவனித்துக் கொள்ளுதல்' பற்றியும் சில சகோதரர்கள் உரையாற்றினார்கள். அதில் பங்கேற்றவர்கள் மிகுந்த ஈடுபாடுடன் இருந்தனர். ஆன்மீக சூழலையும், மாஸ்டரின் ஆசியையும் அப்யாசிகள் உணர்ந்தார்கள்.



## உலக அமைதி நாள்



21-செப்டம்பர் அன்று ஒருங்கிணைந்த நாடுகளின் (United Nations) உலக அமைதி நாளையொட்டி, உலகின் பல மையங்களில் பிரார்த்தனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. குஜராத்தில் அப்பியாசிகளின் நண்பர்களும், உடன் பணிபுரிவர்களும் புதன்கிழமை கூட்டு தியானம் நடைபெறும் இடங்களுக்கு அழைக்கப்பட்டனர். பிரார்த்தனையைத் தொடர்ந்து 23-ஜுலை அன்று லக்னோவில் மாஸ்டர் ஆற்றிய ஆங்கில உரை படிக்கப்பட்டது. பங்கேற்றவர்களுக்கு, இந்த உரை சகஜ மார்க்கம் எதற்காக என்பதை சுருக்கமாக தெரிவித்தது.

## மங்களூர் - கர்நாடகா

24-ஆகஸ்ட் அன்று சகோ.மோகன்தாஸ் ஹெக்டே மங்களூர் மையத்தில் சிறப்புப் பயிற்சி நடத்தினார். பயிற்சி, அப்யாசிகளின் ஆன்மீக முன்னேற்றம், மிஷனை சரியாக புரிந்து கொள்ளுதல், மாஸ்டரிடம் தொடர்ந்து ஆன்மீக ஆதரவு பெறுவதை அப்யாசிகளிடயே ஊக்குவிக்கப்பது ஆகியவற்றைக் குறித்து இருந்தது.

அடிப்படைகள் பற்றிய விளக்கங்கள், புதிய மற்றும் பழைய அப்யாசிகளுக்கு உபயோகமாக இருந்தது. விழாக்களில் (Bhandaras) பங்கேற்க வேண்டிய தேவை, மாஸ்டரிடம் அன்பு வளர்த்தல், பிரார்த்தனையின் செயல்திறன், ஆகியவை விளக்கப்பட்டன. துபாயில் நடந்த அப்யாசிகளுடனான மாஸ்டரின் கலந்துரையாடல் வீடியோவில் காட்டப்பட்டது. அதில் மாஸ்டர் ஆன்மீக நிலையை எப்படி உருவாக்குவது என்று விளக்கியிருந்தார். மாஸ்டர் அவர்கள், அப்யாசியிடம் ஒரு ஆனந்த நிலையை உருவாக்கும்போதெல்லாம் அப்யாசி அந்த நிலையை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி முடிந்தவரை நீண்ட நேரம் தக்க வைத்துக்கொள்ள முயல வேண்டும்.

## கொடைக்கானல் - தமிழ்நாடு

மதுரை, கொடைக்கானல் அப்யாசிகளால் சகஜ மார்க்கத்தை இந்த மலை பிரதேசத்திற்கு எடுத்து செல்லும் முயற்சிகள் தொடர்ந்து வருகின்றன. செப்டம்பர்-12 அன்று இருபது ஆசிரியர்களுக்கு சகஜ மார்க்கத்தை பற்றிய உரை 'பிருந்தாவன் பப்ளிக் பள்ள'யில் நடந்தது. இதில் மிஷன், மாஸ்டர், பயிற்சி முறை, பயிற்சியின் பலன்கள் போன்ற தலைப்புகளில் உரைகள் இருந்தன. சில ஆசிரியர்கள் பயிற்சியில் சேர ஆர்வம் காட்டினர். முதல்வர் திரு. முன்னா சிங் மிகுந்த ஒத்துழைப்பு அளித்தார். ஆசிரியர்களுக்கு VBSE பயிற்சியை விரைவில் அறிமுகப்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டார்.

கிராம வளர்ச்சியை கற்பிக்கும் நிறுவனமான ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி கல்லூரியில் இரண்டு நாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. முதல் நாள் 26-செப்டம்பர் 2008 பத்து ஆசிரியர்களுக்காக நடந்தது. மறுநாள் சகஜ மார்க்க முறையில் தியானம் என்ற நிகழ்ச்சியில் நூறு மாணவர்கள் கலந்து கொண்டனர். பதினைந்து மாணவர்கள் பயிற்சியை ஆரம்பிக்க விரும்பினர். உள்ளூர் அப்யாசி சகோதரர்கள் பிரசாத், V.C. ராவ் ஆகியோர் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள்.



SRCM

# எக்கோஸ் இந்தியா

மண்டல தொகுப்பு

நவம்பர் 2008 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 1 இதழ் 6

## பயிற்றுவிப்பு நிகழ்ச்சிகள்

### பன்ஷெட் புத்துணர்வு மையம், பூனா

மாஸ்டரிடம் அருகாமையை வளர்த்துக்கொள்ளுதல் என்பதே செப்டம்பர் 5 மற்றும் 6 ஆகிய இரண்டு நாட்களில் பன்ஷெட் புத்துணர்வு மையத்தில் நடைபெற்ற மஹாராஷ்ட்ரா எஸ்.ஆர்.சி.எம் இளைஞர்கள் கூட்டத்தின் நோக்கமாக இருந்தது.

இதில் கலந்து கொண்ட 40 அப்யாசிகள் மற்றும் ஒருங்கிணைப்பாளர் குழுவினர்களுக்கு புத்துணர்வு மையத்தின் அமைதியான சூழல் மிகவும் சாதகமாக இருந்தது. இதில் சகஜ மார்க்க பயிற்சிமுறையின் அடிப்படைகள், மாஸ்டரிடம் கொண்டுள்ள தொடர்பு, மற்றும் சகஜ மார்க்கத்தின் ஒளிச்சுடர்களாக இளைஞர்களின் பங்கு போன்ற தலைப்புகள் விவரிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி சொற்பொழிவு, படங்கள், வினாடி-வினா, விளையாட்டு, சிறந்த விளக்கப்படங்கள், மாஸ்டரின் சொற்பொழிவுகளிலிருந்து சம்பந்தப்பட்ட மேற்கோள்கள் மற்றும் சில அப்யாசிகளின் உருக வைக்கும் இசை போன்றவற்றுடன் கலந்து வழங்கப்பட்டது. பூனா அப்யாசிகள் உணவு மற்றும் தங்கும் வசதிகள் தந்ததுடன், பரிவு மற்றும் அன்பினைப் பொழிந்து, கலந்து கொண்ட அனைவருக்கும் இதனை ஒரு நீங்காத அனுபவமாக மாற்றினர்.

### காசியாபாத், உ.பி.

28, செப்டம்பர் 2008-ல் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான அனுபவமுள்ள சுமார் 50 அப்யாசிகள் பங்கு கொண்டனர். இவர்கள் காசியாபாத், சாகிபாபாத் மற்றும் நொய்டா பகுதிகளை சேர்ந்தவர்கள். இதில் கோட்பாடுகளை விட, சரியான மற்றும் ஒழுங்கான பயிற்சி முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

சாதனாவின் அடிப்படைத் தன்மைகள் எளிமையாகவும், முறையாகவும் விளக்கப்பட்டதாக பங்கேற்பாளர்கள் உணர்ந்தனர். அதிகப்படியான சந்தேகங்கள், குறிப்பாக, புத்தகங்கள் படித்தும் தீராத, நிலையான நினைவு மற்றும் தூய்மைப்படுத்துதல் போன்றவை விவரிக்கப்பட்டன. இம்மாதிரி பயிற்சிகள் குறிப்பாக, புதிய அப்யாசிகளுக்கு அதிக அளவில் நடத்தப்படல் வேண்டும்.

### ஜம்மு

9 மற்றும் 26 செப்டம்பர் ஆகிய நாட்களில் இரண்டு வரவேற்பு கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் ஜெனிசிஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் காம்பெடிடிவ் ஸ்டடிஸ் (ஐ ஏ எ ஸ் படிக்கவிருப்பமுள்ளவர்களுக்கான இன்ஸ்டிட்யூட்)-ம் ஒன்று. 21 முதல் 25 வயது வரையிலான 35 மாணவர்களைக் கொண்ட இக்கூட்டத்தில் சகஜ மார்க்கம் என்பது "வாழ்க்கையின் சமநிலைப்படுத்தப்பட்ட ஒரு வழி" என்று எடுத்துரைக்கப்பட்டது. மற்றொன்று ஜம்முவிலிருந்து 90 கி. மீ. தொலைவிலுள்ள நகரமான ஜோதிபுரத்தில் 40 முதல் 45 வயதிற்குட்பட்ட என்.எச்.பி.சி தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்டது. இதில் சகஜ மார்க்கம் என்பது "ஆன்மீகத்தின் ஒரு புதிய ஒளிக்கதிர்" என தொகுத்துரைக்கப்பட்டது. இரண்டு கூட்டங்களுமே நல்ல வரவேற்பைப் பெற்றன. 15 பங்கேற்பாளர்கள் சாதனாவைத் தொடங்குவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.



### ஹைதராபாத், ஆந்திரபிரதேசம்

28, செப்டம்பர் 2008 , ஞாயிற்றுக்கிழமை எஸ்.ஆர்.நகர் தியானக்கூடத்தில் 120 புதிய அப்யாசிகளுக்கு ஒரு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. கடந்த ஒரு வருடத்திற்குள் பயிற்சியை துவங்கியுள்ள அப்யாசிகளுக்காக அனைவரும் பங்கேற்கும் வகையில் ஒரு சிறந்த முகாமாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பங்கேற்பாளர்கள் அனைவரும் இந்த கலந்துரையாடல் முறை, ஆசிரியர் மட்டுமே பேசும் வகுப்பறைக் கல்வியைக் காட்டிலும் நன்றாக இருப்பதாக உணர்ந்தனர்.

"சகஜ மார்க்கத்திற்கு வரவேற்கிறோம்" என்ற சிற்றேடுவுள்ள தலைப்புகளைக் கொண்டு கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அப்யாசிகள் தம் கருத்துக்களை சுலபமாக ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தும் வகையில் தலைப்புகள் முழுமையாக திறந்த வெளியில் விவாதிக்கப்பட்டன. இந்த முகாம் மாஸ்டரின் "சகஜ மார்க்கப் பயிற்சிமுறைகள்" என்ற தலைப்பிலமைந்த ஆடியோ சொற்பொழிவுடன் நிறைவு பெற்றது.

### தின்சுகியா



19, செப்டம்பர் 2008 அன்று 64 அப்யாசிகளுக்கு தின்சுகியா ஆசிரமத்திலும் மற்றும் 19 அப்யாசிகளுக்கு திப்ருகர் மையத்திலும் ஒரு அப்யாசி பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

சகோதரர் அசோக் செங்குப்தா கணிப்பொறி வாயிலாக விளக்கப்படங்கள் காண்பித்து பேசினார். அவர் மாஸ்டர் அவர்களை மேற்கோளிட்டு, "நாம் விவரித்துக்கொண்டிருக்கும் மாஸ்டரிடம் சரணாகதி என்பது அவ்வளவு எளியதான விஷயமல்ல, ஆனால் அவர்தம் வேலைகளைச் செய்வதன் மூலம் மாஸ்டரை நம்மிடம் சரணடைய வைக்க முடியும்" என்று கூறினார்.

### பிதாரில் முழு நாள் நிகழ்ச்சி நிரல், கர்நாடகா

21, செப்டம்பர் 2008, ஞாயிற்றுக்கிழமை இணைச் செயலாளர் எ.பி. துரை அவர்களால் பிதாரில் முழு நாள் நிகழ்ச்சி நிரல் நடத்தப்பட்டது. வட கர்நாடகா இசடைசி சகோதரர் ராஜு சுசாம்பர்கர் மற்றும் பிதார், பால்கி, தனகுஷ்னூர், குல்பர்காவிலுருந்தும் வந்திருந்த சுமார் 50 அப்யாசிகளும் கலந்து கொண்டனர். காலை சத்சங்கத்தைத் தொடர்ந்து அனைத்து அப்யாசிகளும் ஆர்வத்துடன் பங்கேற்ற "அவரவர் மையங்களில் நமது மிஷன் வளர்வதற்காக நாம் எவ்வாறு பங்காற்றுவது?" என்ற கலந்துரையாடல் நடைபெற்றது. அப்யாசிகள், வரவேற்புக் கூட்டங்கள், இல்லங்களில் ஒருங்கிணைத்தல், நம்மை மேம்படுத்திக் கொண்டு ஒரு முன் மாதிரியாக இருந்து மிஷனை மற்றவரிடம் எடுத்துச் செல்லல் போன்ற கருத்துக்களை வெளிப்படுத்தினர். மதிய வேளையில் 'ஹபுல்-பபுல்' தொடரிலிருந்து மாஸ்டருடைய சொற்பொழிவு திரையிடப்பட்டது. மொத்தத்தில் இது, அப்யாசிகள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு உற்சாகத்தை வளர்த்துக்கொள்ளவும், ஒரு புதிய உணர்வுடன் சாதனாவை அணுகவும் பெரிதும் உதவியது.



## ஹைதராபாத் வி.பி.எஸ்.சி மையத்தின் வளர்ச்சிப் பணிகள்

ஹைதராபாத் வி.பி.எஸ்.சி மையம் அப்யாசிகள் மற்றும் மாணவ சமுதாயத்திற்கு கல்வியின் மூலம் ஆன்மீகத்தின் மதிப்புகளை பயிற்றுவிப்பதில் அதிக கவனம் செலுத்தியது.

உஸ்மானியா மருத்துவ கல்லூரியில் 22, ஆகஸ்ட்-ல் "நமது கண்ணோட்டத்தில் வாழ்க்கை" மற்றும் "இலக்கு நிர்ணயித்தல்" என்ற தலைப்புகளில் முதலாமாண்டு மாணவர்களுக்கு இரண்டரை மணி நேர கலந்துரையாடல் நடத்தப்பட்டது. கற்பிக்கத்தக்க, கருத்துகள்மிக்க, ஊக்கமான, மனதை தொடுகின்ற மற்றும் தூய்மையான விளக்கங்களை இக்கூட்டத்தில் பங்கேற்றவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.

இக்குழு செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் நந்தியா பகுதி எஸ்.பி.ஒய். ரெட்டி பள்ளியில் அப்பகுதியைச் சேர்ந்த 38 ஆசிரியர்களுக்கு ஒரு பயிற்சி முகாமை நடத்தியது. இதில் கல்விமுறை, கல்விமுறையில் ஆசிரியர்களின் பங்கு, முதனிலை மற்றும் இரண்டாம் நிலை பள்ளிகளின் கல்விதிட்டம், நன்னெறி, வாழ்க்கை மற்றும் அதன் உண்மையான கண்ணோட்டம், கணிதம் மற்றும் கட்டுப்பாட்டு மனதுடன் கல்வி கற்றலின் தேவை போன்ற தலைப்புகள் விவாதிக்கப்பட்டன.

7, செப்டம்பரில் அப்யாசிகளுக்கு வி.பி.எஸ்.சி பற்றி ஆரம்ப பயிற்சி நடத்தப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து 20 மற்றும் 21 செப்டம்பரில் 45 அப்யாசிகளுக்கு ஒரு முழுமையான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. பல்வேறு தலைப்புகள் பற்றிய கோட்பாடுகளைக் கேட்பது மற்றுமின்றி அவர்களும் முழுமையாக பங்குபெற நன்னெறி சார்ந்த விளையாட்டுகள் மேலும் நாடகங்கள், பாட்டு போன்ற குழு நடவடிக்கைகளும் நடத்தப்பட்டன. அப்யாசிகள் எவ்வாறு பள்ளிகளை அணுகுவது, நன்னெறி கல்வி பற்றி எவ்வாறு விளக்குவது, நிழ்ச்சிகளை எவ்வாறு நடத்துவது மற்றும் செயல்களை எவ்வாறு மேற்பார்வையிடுவது என்பது பற்றி கற்பிக்கப்பட்டனர்.

E மற்றும் L குழுக்களைச் சேர்ந்த, மற்றும் இதர ஆசிரியர்களுக்கும் 28 செப்டம்பர் அன்று, மண்டல மையத்தில் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் பங்கு கொண்ட ஆசிரியர்கள் ஆசிரமத்தில் நிலவிய ரம்மியமான சூழ்நிலையை அனுபவிப்பதாகவும், இந்த கருத்தரங்கு அவர்களது வாழ்வில் ஒரு மாற்றத்தை உண்டாக்கியதாகவும், அது அவர்களது பணி மற்றும் குழந்தைகளைக் கையாளும் விதத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் கூறினர்.

### காசியாபாத், உ.பி.

இங்குள்ள ஆசிரமத்தில், அருகிலுள்ள கல்லூரியைச் சேர்ந்த பி.எட். படிக்கும் எழுபது மாணவர்களுக்கு விபிஎஸ்சி பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. முதல்வர், துறைத்தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களும் இதில் கலந்து கொண்டனர். நன்னெறி சார்ந்த கல்வியின் தேவை, தியானத்தின் மூலம் மனதை ஒழுங்குபடுத்துவதன் அவசியம் போன்றவை முக்கிய விஷயங்களாக விளக்கப்பட்டன.

ஆன்மா மற்றும் தூய மனதின் முக்கியத்துவம், நான் யார் மற்றும் உடலின்மீது மனதின் பங்கு, மனதைப் பயன்படுத்தி பதிவுகளை நீக்கி எவ்வாறு ஆன்மாவுடன் தொடர்பு கொள்வது போன்ற விஷயங்கள் விவரிக்கப்பட்டன. இந்த கருத்துக்களை இல்லம் வரை கொண்டு செல்ல நடைமுறை விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

மிஷன் மற்றும் சகஜ மார்க்க பயிற்சிமுறை பற்றி ஒரு சிறிய விளக்கம் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி 5 நிமிட பிரார்த்தனை தியானத்துடன் முடிவுபெற்றது. இதற்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து நேர்மாறான நல்ல வரவேற்பு கிடைத்தது. இந்நிகழ்ச்சி சகோதரி சந்தர் கண்டா மற்றும் சகோதரர் அங்கூர் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

## ராஞ்சியில் வி.பி.எஸ்.சி செயிண்ட் அலாய்சிஸ் பள்ளி

இங்கு கட்டுரைப்போட்டிகள் நடத்தப்பட்டதின் விளைவாக, பள்ளி கலையரங்கத்தில் செப்டம்பர் 2-ல் ஒரு நிகழ்ச்சி நிரல் ஏற்பாடு செய்விக்கப்பட்டு நடந்தது. அன்று பள்ளி விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்ததால் குழந்தைகள் வகுப்பு, முதனிலை, இரண்டாம் நிலை சம்பந்தப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் முழுமையாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி சகோதரர் அருண்குமார் லால் மற்றும் சகோதரர் சில்வெஸ்டர் சுரின், பள்ளி முதல்வர் ஆகியோரால் துவக்கி வைக்கப்பட்டது. இப்பள்ளியின் முன்னாள் மாணவர் சகோதரர் மனோஜ் திவாரி மிஷன், எஸ்எம்எஸ்எப், எஸ்எம்ஆர்டிஐ ஆகியவை பற்றி விளக்கியதுடன் எஸ்எம்ஆர்டிஐ-யின் விபிஎஸ்இ-யின் நோக்கத்தினை அறிமுகப்படுத்தினார்.

அப்யாசி சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் விபிஎஸ்இ பற்றிய உரைகளுக்குப்பின் சகோதரர் கில்பெர்ட் பின்டோ எஸ்ஜே, நன்றியுரை வழங்கினார். அவர் ராஞ்சி மையத்தைச் சேர்ந்த அப்யாசிகளுக்கும், மிஷனுக்கும் இந்த நிக்ழ்ச்சியை ஏற்பாடு செய்ததமைக்காக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். அவர் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் தற்போதைய மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளதைக் குறிப்பிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

### உருசிலின் பள்ளி

செயிண்ட் அலாய்சிஸ் பள்ளியில் நடத்திய நிழ்ச்சியின் காரணமாக உருசிலின் சகோதரிகள் சகோதரர் முகேஷ் தனிஜா அவர்களை தொடர்பு கொண்டு அதே போன்று ஒரு நிகழ்ச்சியினை உருசிலின் சமுதாயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் நடத்தித் தரும்படி கேட்டுக் கொண்டனர்.

27, செப்டம்பர் அன்று குழந்தைகள் வகுப்பு, முதனிலை, இரண்டாம் நிலை, கல்லூரி மற்றும் இதர உருசிலின் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த சுமார் 100 ஆசிரியர்களுக்கு வி.பி.எஸ்.இ பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்த நிரலை சுருக்கமாகவும், சரியாகவும், மற்றும் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடியும் நடத்த செயிண்ட் அலாய்சிஸ் பள்ளியில் கிடைத்த அனுபவம் மிகவும் உதவியாக இருந்தது.

அங்கு குறைந்தபட்சம் இரண்டு பள்ளிகளில் விபிஎஸி திட்டம் துவக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதன் வாயிலாக மாஸ்டரது விருப்பங்களை அதிகப்படியானவர்களுக்கு எடுத்துரைத்து இள மனங்களில்



நன்னெறி பற்றிய விஷயங்களை உருவாக்கும் வாய்ப்பு எஸ்.ஆர்.சி.எம்-க்கு கிடைத்தது.

### பரோனி, பீகார்

29, செப்டம்பர் 2008 அன்று, அப்யாசிகள், ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளுக்கு பரோனியில் விபிஎஸ்சி பற்றிய ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பாட்னா மையத்தைச் சேர்ந்த சகோதரர் டாக்டர் விஜயகுமார் அவர்கள் தற்போதைய கல்வி முறையின் நிலைகள் பற்றியும், நன்னெறி சார்ந்த கல்வியை குழந்தைகளுக்கு கற்பிக்க தேவையான வழிகள் பற்றியும் அறிமுகவுரை வழங்கினார். தன்பாத் மையத்தைச் சேர்ந்த சகோதரி தீப்தி நன்னெறி கல்விக்கு செய்முறை வகுப்புகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை நடத்திக் காட்டினார்.

# வரவேற்புக் கூட்ட நிகழ்ச்சிகள்

## பரோனி ரிபைனரியில் பயிற்சிபெறும் பொறியாளர்கள்

மன அழுத்தக்கட்டுப்பாடு மற்றும் தன்னல மேம்பாடு பற்றிய ஒரு பணிமனை ஐ.ஒ.சி.எல் ரிபைனரி பிரிவைச் சேர்ந்த, தகுதி பற்றிய ஆய்வுக்குட்பட்ட காலத்தில் பணியாற்றும் முப்பது பொறியாளர்களுக்கு 20, செப்டம்பர் 2008 அன்று நடத்தப்பட்டது. அந்த பிரிவைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். சகோதரர் பிரபோத் சங்க்வி தியானம் மூலமாக மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துதல் பற்றி விவாதித்தார். தன்னல மேம்பாட்டில் தியானத்தின் பங்காற்றல் பற்றிய விவாதத்தில் டாக்டர் ஜி.எம். பட்னாகர் சகஜ மார்க்க முறையில் ஆன்மீகப்பயிற்சி எவ்வாறு தன்னல மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் என்பது பற்றி விளக்கமளித்தார். பெகூசாறை மற்றும் அருகாமையிலுள்ள மையங்களிலிருந்து அப்யாசிகள் அதிக அளவில் இந்த பணிமனையில் கலந்து கொண்டனர்.

## ராம் நகர், உத்தராகண்ட்

வனப் பாதுகாப்பு அதிகாரி சகோதரர் என்.வி. சிங் அழைத்ததின்பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் 52 வனத்துறை பணியாளர்கள் கலந்து கொண்டனர். ஆன்மீகத்தின் அழைப்பு என்ற தலைப்பில் மிஷன் பிரசெப்டர் பேசிய உரையை பங்கேற்பாளர்கள் ஆழ்ந்து கவனித்த விதமும் கலந்தாலோசித்தலில் பங்கு கொண்ட விதமும் சகஜ மார்க்கம் பற்றி மேலும், மேலும் அறிந்து கொள்ளும் அவர்களது ஆர்வத்தை தெளிவாக காட்டியது..

## உஜ்ஜயின்

மையத்தைச் சேர்ந்த அப்யாசி சகோதர, சகோதரிகளால் அழைத்து வரப்பட்ட ஆன்மீக தாகம் கொண்ட 110 பங்கேற்பாளர்களை காண முடிந்தது.

மனித வாழ்வின் லட்சியம் மற்றும் சாதனாவின் அடிப்படைகள் என்ற இரண்டு தலைப்புகளைக் கொண்டு வரவேற்புக் கூட்டம் துவங்கியது. சகோதரர் சஞ்ஜய் கண்டேல்வால் மாஸ்டர் மற்றும் மிஷன் பற்றி பேசினார்.

நிக்ழ்ச்சியின் முடிவில் சகோதரர் விகல்ப் முந்த்ரா மற்றும் சகோதரர் ஒய்.ஜி. ஜோசி அவர்களால் கேள்வி-பதில் பகுதி நடந்தப்பட்டது. சுமார் எண்பது பங்கேற்பாளர்கள்

இக்கூட்டத்தைப் பெரிதும் விரும்பியதுடன் எஸ்ஆர்சிஎம்-ல் இணையும் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.




## அஹமதாபாத்

தியானத்தின் வாயிலாக மனதை ஒழுங்குபடுத்துதல்

என்பதே 28 செப்டம்பரில் நடத்தப்பட்ட வரவேற்புக் கூட்டத்தின் தலைப்பாகும். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் இதற்கு அழைக்கப்பட்டிருந்தனர். இக்கூட்டத்தின் பயனாக இளம் மாணவர்கள் அப்யாசியாகளாக சேர்ந்தனர்.

பரந்த இடம் கொண்ட நிர்மா யுனிவர்சிட்டி வளாகத்தில் நிர்மா யுனிவர்சிட்டி, அஹமதாபாதைச் சேர்ந்த ஆசிரியர்களுக்காக மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துதல் பற்றிய விளக்கவுரை வழங்கப்பட்டது. மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், வேலைத் திறன்களை அதிகரிக்கவும், நல்ல செயலாக்கம் போன்ற அனைத்திற்கும் தியானம் என்பதே ஒரே வழி என்று விவரிக்கப்பட்டது.

ஆசிரியர்கள் மிகவும் மகிழ்வுற்றதுடன் பேச்சாளரை அவர்கள் இன்ஸ்டிட்யூட் நிறுவன நாள் விழாவிற்கு தலைமையேற்று மாணவர்கள் மத்தியில் உரையாற்றும்படி அழைப்பு விடுத்தனர்.

## பி.எச்.இ.எல், ஹைதராபத்

செயிண்ட் சேவியர்ஸ் பிஜி காலேஜ், ஸ்காலர்ஷ் டிகிரி காலேஜ் மற்றும் ராவ்ஸ் இன்ஷ்டிட்யூட் ஆப் காமர்ஸ் போன்றவற்றிலிருந்து எழுபத்தைந்து மாணவர்கள் 20, செப்டம்பரில் முழு நாள் நிதழ்ச்சியில் நடைபெற்ற தியானத்தின் மூலம் மனதினை ஒழுங்குபடுத்தல் என்ற கருத்தரங்கில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மிஷனின் குறிக்கோள்கள், இளைஞர்களுக்கான தியானம் மற்றும் தனி மனித மாற்றத்தின் மூலம் சமுதாய மாற்றம் என்ற கருத்து ஆகியவற்றால் மிகவும் ஊக்கமடைந்தனர். அனைவரும் பங்குபெறும் விளையாட்டுகள், கேள்வி-பதில் பகுதி மற்றும் மாஸ்டரது வீடியோ சொற்பொழிவிலிருந்து சில பகுதிகள் ஆகியவை நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டின.

சகஜ மார்க்கப் பயிற்சி மேற்கொள்வதிலும் அறிமுக அமர்வுகளில் முப்பது மாணவர்கள் ஆர்வம் தெரிவித்தனர். மேற்கொண்டு அவர்களுடனான சந்திப்புகள் தற்போது பிஎச்இஎல் மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சிப்சாகர், அஸ்ஸாம்



ஜோர்கத், நசிரா மற்றும் தின்சுகியா போன்ற இடங்களிலிருந்து அப்யாசிகள் கலந்து கொண்ட இரண்டு வரவேற்புக் கூட்டங்கள் சிப்ஷாகர் மாவட்டத்தில் 20, செப்டம்பர் அன்று சகோதரர் சுதிர் பார்டியா அவர்களால் நடத்தப்பட்டது. காலையில் நடைபெற்ற கூட்டத்தில் பெரும்பாலும் வியாபார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், சில பத்திரிகையாளர்கள் மற்றும் கல்வியியலைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். மாலையில் நடந்த கூட்டத்தில் ஆயில் இந்தியா மற்றும் பண்ணை குடும்பத்தைச் சேர்ந்த 17 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். 9 நபர்களுக்கு அடுத்த நாள் முதல் அறிமுக அமர்வுகள் கொடுக்கப்பட்டன.

## மசூரி, உத்தராகண்ட்

நாட்டின் சிறந்த ஆட்சிப்பணித்துறை பயிற்சி நிறுவனமான மசூரியுலுள்ள லால் பகதூர் சாஸ்திரி நேஷனல் அகாடெமி ஆப் அட்மினிஷ்ட்ரேசன்-க்கு சகஜ மார்க்கத்தின் மீது ஒரு இணக்கம் ஏற்பட்டுள்ளது. 1995 ஆம் ஆண்டு குழுவினைச் சேர்ந்த நாடு முழுவதுமுள்ள சுமார் 110 இந்திய ஆட்சிப்பணித்துறை அதிகாரிகள் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் நடைபெற்ற இடைநிலை பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். இந்த பயிற்சியின் போது இதில் உறுப்பினர்களான கேங்டாக் மையத்தைச் சேர்ந்த சகோதரர் ரவிந்திர தெலங் மற்றும் போபால் மைய சகோதரர் சச்சின் சின்கா ஆகிய இருவரும் பல முறை இக்குழுவில் மாஸ்டர், மிஷன் மற்றும் பயிற்சிமுறை பற்றி சகஜமாக கலந்துரையாடியுள்ளனர். "தியானத்தின் மூலம் சமநிலை வாழ்வு - ஒரு ஆன்மீகக் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் விளக்கமும் ஒரு கலந்துரையாடலும் சம்பிரதாயப்படி நடத்தினர்.

அதே போன்று மற்றுமொரு நிகழ்ச்சி 2007 ஆம் ஆண்டு குழுவினைச் சேர்ந்த தகுதி பற்றிய ஆய்வுக் காலத்திற்குட்பட்ட ஐஏஎஸ் அதிகாரிகளுக்கும் 31 மே, 2008 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. பங்கேற்பாளர்கள் யோகா, தியானம் மற்றும் அதன் விளைவுகளான மனிதநேயம், மன அழுத்தம் கட்டுப்படுத்தப்படுதல், இவைகளின் வாயிலாக சமநிலை வாழ்வு போன்றவற்றில் தங்களது மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினர். மொத்தமாக, 21 அதிகாரிகள், ஸ்ரீலங்கா ஆட்சிப்பணித்துறை அதிகாரி ஒருவர் உட்பட ஐந்து குடும்ப உறுப்பினர்கள் அறிமுக தியானங்கள் பெற்றுக்கொண்டு இரண்டு மாத நீண்ட பயிற்சி முகாமின் போதே தியானம் தொடங்கினர். ஏப்ரல் 30 பாபுஜி பிறந்த நாள் உட்பட தொடர்ந்து சத்சங்கங்கள் நடத்தப்பட்டன. சில சகோதரர்கள் டெஹராடூன் ஆசிரமத்திக்கு சென்றும் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். மாஸ்டர் ஒரு செய்திச்சுடரில் புதிய அப்யாசிகளை வரவேற்று, ஆசிர்வதித்ததுடன் மிஷன் கமிட்டியை அவர்களை தொடர்ந்து கண்காணித்து உதவும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

## வட கர்நாடகா

### வாடியில் நடந்த வரவேற்புக்கூட்டம்

ரெயில்வே காலனி மஸ்தூர் யூனியன் கூடத்தில், 17ஆம் தேதி ஆகஸ்ட் மாதம் நடந்த நிகழ்ச்சி நிரலுக்கு, இருபது பேர்கள் வந்திருந்தனர். அநேகமாக பலரும் ரெயில்வேயில் பணி புரிபவர்கள். ஹிந்தியில் பேசிய டாக்டர்.கஜேந்திர சிங், சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி எளிமையாக விளக்கினார். சகோதரர் ராஜு கஷாம்பூர்கர் அவர்கள் சகஜ மார்க்கத்தின் பல நுணுக்கமான அம்சங்கள் பற்றி பேசினார். வாடி ப்ரிசெப்டர், சகோதரர். கிஷன் ராவ் அவர்கள் முடிவுரையாற்றினார். இதைத் தொடர்ந்து மிக உற்சாகமான கலந்துரையாடல் நடந்தது. வருகை தந்திருந்தவர்களில் ஐந்தாறு பேர்கள், பயிற்சியை ஆரம்பிக்க தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

### சித்தாப்பூர்

ஆகஸ்ட் 24ஆம் தேதி சித்தாப்புரில் உள்ள விட்டல் மந்திர் என்னும் இடத்தில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடத்தப் பட்டது. அருகில் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் இருந்து சுமார் ஐம்பது பேர்கள் அதில் கலந்து கொண்டனர். சகோதரர். ராஜு கஷாம்பூர்கர் அவர்கள், நமது மாஸ்டர் மற்றும் மிஷன் பற்றி கன்னட மொழியில் பேசினார். அதன் பிறகு சகோதரர் டாக்டர்.கஜேந்திர சிங் அவர்கள், மனித வாழ்வின் உண்மையான லட்சியம் பற்றியும், சகஜ மார்க்க பயிற்சிமுறை பற்றியும் உரை நிகழ்த்தினார். இறுதியாகப் பேசிய சகோதரர் கே.நாரயண ராவ் அவர்கள், ஆன்மீகத்தின் அவசரத்தேவை மற்றும் ஆன்மீகப்பயிற்சியைத் தொடங்குவதற்கான அவசியம் பற்றியும் கன்னடத்தில் விளக்கினார். வருகை தந்திருந்த அனைவரும் சொற்பொழிவுகள் அனைத்தையும் ஆழ்ந்து கவனித்துக் கேட்டனர். இறுதியில் அவர்கள் கேட்ட வினாக்கள் அனைத்தும் தெளிவு படுத்தப்பட்டன. சித்தாப்பூர் பிரிசெப்டர், சகோதரர். மதுகர் ராவ் நாயக் அவர்களின் நன்றி அறிவிப்புடன் கூட்டம் முடிவடைந்தது.

### குல்பர்காவில் நடந்த கூட்டம்

பிரிகேடியர் மகேஷ் தேஷ்பாண்டேயின் இல்லத்தில் ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில், இருபது, இருபத்தைந்து வயதுக்குட்பட்ட சுமார் பத்து பேர் கலந்து கொண்டனர். டாக்டர். கஜேந்திர சிங் கன்னடத்திலும், ஸ்ரீகாந்த் ஜோஷி இந்தியிலும் பேசினார்கள். சகஜ மார்க்கப் பயிற்சியின் எளிய, சக்தி வாய்ந்த முறைகள் வலியுறுத்தப்பட்டன.அனைவரும் ஆழ்ந்து கவனித்து, முடிவில் பல வினாக்களைக் கேட்டனர். நிகழ்ச்சிக்கு நல்ல வரவேற்பு இருந்தது. நிகழ்ச்சிமுழுவதும் மாஸ்டரின் தெய்வீகப் ப்ரசன்னத்துடன், ஒரு மென்மையான ஆன்மீகச் சூழ்நிலை எங்கும் வியாபித்திருந்ததை அனைவரும் உணர்ந்தனர்.





### கொப்பால்

சகோதரர் காமத் மற்றும் சகோதரர் ராஜு கஷாம்புர்கர் இருவரும் ஆன்மீகத்தில் ஈடுபாடுள்ள இருபதைந்து பேர்களுக்கு, மிஷன் பற்றிய அறிமுக விளக்கங்கள் அளித்தனர். உரையாடலைத் தொடர்ந்து, குல்பர்கா மற்றும் கொப்பாலைச் சேர்ந்த குழந்தைகளால் சிறிய கலை நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. அதை அடுத்து, நம் பயிற்சியில் எவ்வாறு முன்னேற்றமடைவது, மற்றும் மையங்களை எவ்வாறு வளர்ச்செய்வது என்ற தலைப்புகளில் குழுக் கலந்துரையாடல் நடைபெற்றது. பத்து குழுக்கள் இருந்தன. ஒவ்வொரு குழுவின் தலைவரும், தன் குழுவில் இருந்த அப்யாசிகள் கூறிய கருத்துக்களைத் தொகுத்து வழங்கினார். இந்த ஒரு நாள் நிகழ்ச்சியில், கொப்பால், கங்காவதி, பெல்லாரி, கம்ப்ளி-கொட்டல், குல்பர்கா, ஹுப்ளி போன்ற பல்வேறு மையங்களைச் சேர்ந்த நூற்று முப்பது அப்யாசிகள் கலந்து கொண்டனர். அனைவரும் அந்த நிகழ்ச்சியால் மிகவும் பயன் அடைந்ததாகத் தெரிவித்தனர்.

## கட்டுரைப் போட்டி



ஐக்கிய நாடுகள் இளைஞர் தினம் நினைவாக ஸ்ரீராம் சந்த்ர மிஷன் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை இணைந்து நடத்திய இந்திய அளவிலான கட்டுரைப்போட்டி பள்ளிகள், கல்லூரிகள், நாடெங்கிலும் உள்ள எல்லா ஆசிரமங்களிலும், நடைபெற்றது. இளைஞர்கள், குழந்தைகளின் மனதில் நன்னெறிகளைப் பதியவைத்து, அதன் மூலம், அவர்களுக்குள் இருக்கும் அளவில்லாத சக்தி, ஆர்வம், திறந்த மனப்பான்மை, சிறந்த முன் உதாரணம் போன்றவைகளை மென்மேலும் வளரச்செய்து, செம்மைப்படுத்துவதுதான் இந்த நிகழ்ச்சியின் நோக்கம் ஆகும்.

பத்து வயது முதல், இருபத்து நான்கு வயதுவரை, சுமார் எழுபத்தையாயிரம் குழந்தைகளும், இளைஞர்களும் பங்கேற்ற இந்த போட்டியின் கட்டுரைகள், தற்சமயம் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. பத்து முதல் பதினாறு வயது குழந்தைகள், 'உண்மையே துணிவு' என்ற தலைப்பிலும், பதினேழு முதல் இருபத்திநான்கு வயதுவரை உள்ளவர்கள், 'சுயமரியாதையும், தன்னம்பிக்கையும், ஒருவரை நன்னடத்தை உள்ளவராக உருவாக்கும்' என்ற தலைப்பிலும் கட்டுரை எழுதினர். கட்டுரைகள்,ஆங்கிலம் மற்றும் பத்து இந்திய மொழிகளிலும் எழுதப்பட்டன. இப்போட்டி மாணவர்களுக்கு மகிழ்ச்சி அளித்ததோடு மட்டும் அல்லாமல், தொண்டர்களாகப் பணி புரிந்த அப்யாசிகளுக்கும், பெரிய பாடம் ஊட்டும் அநுபவமாக அமைந்தது.

பஞ்சகுலாவில் உள்ள டூன் பள்ளி, வடக்கே உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகம், மற்றும் தெற்கே உள்ள பல பள்ளிகள், போன்ற நாடெங்கிலும் உள்ள இடங்களில் மிகப்பெரும் அளவில் மாணவர்கள் பங்கேற்றனர். ராஞ்சியில் இருந்து சுமார் ஆறாயிரத்து ஐநூறு மாணவர்கள் ஆங்கிலம், மற்றும் ஹிந்தியில் கட்டுரை எழுதினர். ஜாம்ஷெட்பூர்,தன்பாத், பொக்காரொ, ராம்கர், லால்பானியா, பாட்னா, சிந்த்ரி போன்ற இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த போட்டிகள், இளம் மாணவர்கள் இதயத்தை நெகிழ வைத்தது. கர்னாடகாவில் உள்ள ஷிமோகாவில், ஐந்தாம் படிவம் முதல் பத்தாம் படிவம் வரை படிக்கும் சுமார் ஐம்பது கண் பார்வை அற்ற மாணவர்கள், மிக உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இவர்கள் சொல்லியதை ஆசிரமத் தொண்டர்கள் எழுதிக் கொண்டனர்.

இந்தக் கட்டுரைப் போட்டியானது, தொண்டர்களின் ஏற்பாடுசெய்து, நிர்வகிக்கும் திறனை செம்மைப்படுத்த உதவியது. பள்ளிகள், கல்லூரிகளை அணுகி, போட்டிக்கு ஏற்பாடு செய்து, கட்டுரை எழுதும் சமயம் மேற்பார்வை செய்து, கட்டுரைகளை மதிப்பீடு செய்ய முன்வந்த அப்யாசிகளை ஒருங்கிணைத்து, மெருகேற்றி செயல்பட வைக்கும் வாய்ப்பு அனைத்து மையங்களுக்கும் கிடைத்தது. கட்டுரைப் போட்டியைத் தங்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஏற்பாடுசெய்ய, முதல்வர்களும், ஆசிரியர்களும் காண்பித்த ஆர்வம், அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

ஆசிரியர்கள் பலரும், சகஜ மார்க்க தியான முறை பற்றிக் கேட்டு அறிந்து கொண்டனர். சிலர், பயிற்சி ஆரம்பிக்கவும் ஆர்வம் காட்டினர்.

கட்டுரை போட்டிகளின் முடிவு 'டிசம்பர் மாத இறுதியில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆங்கிலத்தில் முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கு கேடயங்கள் வழங்கப்படும். மற்ற அனைத்து இந்திய மொழிகளிலும், சிறந்த மூன்று கட்டுரைகளுக்கு, புத்தகங்கள் வழங்கப்படும். அறுபது சதவிகிதத்திற்கு மேல் மதிப்பெண் பெறும் அனைவருக்கும், நற்சான்றிதழ்கள் வழங்கப்படும்.

SRCM

# எக்கோஸ் இந்தியா

நவம்பர் 2008 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 1 இதழ் 6



## ஆன்மீக ஒளி மையங்கள்

### மற்றொரு ஒளி மையம் --- உருவாக்கத்தில்..சேவாஸ்ரம்--- திருவனந்தபுரம்

கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில், ஆசிரமத்திற்கான ஓர் அழகான இடம், அருவிக்கரா அணைக்கட்டு அருகில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பல வருடங்களுக்கு முன்பு மாஸ்டரும், பாபுஜி மகராஜ் அவர்களும், திருவிதாங்கூர் மகாராஜாவின் விருந்தினர்களாக வந்திருந்ததும், அச்சமயம்,

மகாராஜாவும், அவர் குடும்பத்தினரும் சத்சங்கங்களில் பங்கெடுத்துக் கொண்டதும், நினைவு கூறத் தக்கதாகும். அரபிக் கடலுக்கும், மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் இடையில் உள்ள குறுகிய பகுதியில் அமைந்துள்ள திருவனந்தபுரத்தில், ஒரு ஆசிரமம் அமைக்கவேண்டுமென்பது அங்குள்ள அப்யாசிகளின் கடந்த பத்து வருட கால கனவாகும்.

2006 ஏப்ரல் பதினைந்தாம் தேதி அன்று கேரளா மற்றும் அருகில் உள்ள தமிழக மையங்களில் இருந்து வருகை தந்திருந்த ஆயிரக்கணக்கான அப்யாசிகளின் முன்னிலையில், மாஸ்டர் அவர்கள் ஆசிரமத்திற்கான அடிக்கல் நாட்டியபோது, அவர்களின் பிரார்த்தனைக்கு விடை கிடைத்தது. ஏப்ரல் பதினைந்து 2006 தினமானது, திருவனந்தபுரம் அப்யாசிகளின் நினைவில் என்றும் நிலைத்து நிற்கும் ஒன்றாக அமைந்தது. அடிக்கல் நாட்டிய பிறகு நம் அன்பிற்குரிய மாஸ்டர் அவர்கள், அவ்விடத்திலேயே சத்சங்கம் நிகழ்த்தினார். பிறகு தன் விவேகமான உரையாடல் மூலம் அப்யாசிகளை மேலும் ஆசீர்வதித்தார்.

மூன்று ஏக்கர் பரப்பளவில் ஆசிரமும், அதை அடுத்து இரண்டு ஏக்கர் பரப்பில் ஒரு அப்யாசிகளின் குடியிருப்புப் பகுதியும் உள்ளது. இந்த இடமானது, திருவனந்தபுரம் ரயில் நிலையத்தில் இருந்து பதினேழு கி.மீ. தொலைவிலும், விமான நிலையத்தில் இருந்து இருபத்து ஐந்து கி.மீ. தொலைவிலும் உள்ளது.

அருவிக்கரா அணைக்கட்டு ஆசிரமத்தின் அருகில் உள்ளது. இங்கிருந்துதான் நகரத்திற்கு குடிநீர் வசதி வழங்கப்படுகிறது. மரங்கள் நிறைந்த ஆசிரமத்தின் நிலமானது, இந்த அணைக்கட்டின் நீர்பிடிப்புப் பகுதியில் உள்ளது. இந்த பசுமையான பரந்த காட்சி வியக்கத்தக்க அனுபவத்தை அளிக்கிறது. இந்த ஆசிரமத்திற்கு அன்புக்குரிய மாஸ்டர் அவர்கள், சேவாஸ்ரம் எனப் பெயரிட்டார்.

திருவனந்தபுரம்-வல்லநாடு பேருந்துப் பாதையில் ஆசிரமம் அமைந்துள்ளது.

ஆசிரமத்திற்கான மனையிடத்தில் உள்ள ஒரு சிறிய கட்டிடம் தற்காலிக தியானக்கூடமாக மாற்றம் செய்யப்பட்டு அங்கு ஞாயிற்றுக்கிழமை சத்சங்கம் நடை பெற்று வருகிறது. கட்டிட வரைபடம் மாஸ்டரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, தற்சமயம் அடித்தள வேலைகள் நிறைவு பெற்று உள்ளன. ஆசிரமங்கள் அனைத்தும் ஒளி மையங்கள் என நம் மாஸ்டர் கூறி உள்ளார். அவை இருளை அகற்றி தெய்வீக ஒளியைப் பரப்பும். நம் மதிப்பிற்குரிய மாஸ்டர் அவர்களால் இப்புதிய ஆன்மீக ஒளி மையம் திறந்து வைக்கப்படும் நாளைக் காண நாம் அனைவரும் மிக ஆர்வமுடன் காத்திருக்கிறோம். அந்நாள் மிகத் தொலைவில் இல்லை என்பது திண்ணம்.







### ஸ்ரீ ராம் சந்த்ராமிஷன் அடையாள அட்டைகள்

நம் மிஷனில் அப்யசிகளுக்கு இரண்டு விதமான அடையாள அட்டைகள் வழங்கப் படுகின்றன. இவற்றில் ஏதாவது ஒன்றை அப்யாசிகள் வைத்திருக்க வேண்டும்.

| அறிமுக அட்டை | அப்யாசி அடையாள அட்டை |
|---|---|
| சகஜ மார்க்கப் பயிற்சிக்கு ஒரு அப்யாசி அறிமுகப்படுத்தப்பட்டவுடன் அறிமுக அட்டை வழங்கப்படுகிறது. கொடுக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலம் இந்த அறிமுக அட்டையை உபயோகப்படுத்தலம். 'அப்யாசி அறிமுகப் படிவத்த' பூர்த்தி செய்து, அறிமுகம் செய்த பிரிசெப்ட்ரிடம் கொடுத்து இந்த அட்டையை, அப்யாசிகள் பெற்றுக்கொள்ளலாம். | ஒரு அப்யாசி குறைந்த பட்சம் ஆறு மாத காலம் ஒழுங்கான பயிற்சி செய்த பிறகு இந்த அட்டை வழங்கப் படுகிறது. இந்த அட்டையைப்பெறுவதற்கு<br>- அப்யாசியிடம் அறிமுக அட்டை இருக்க வேண்டும்.<br>- அப்யாசி ஆறு மாத காலம் முறையாகப் பயிற்சி செய்திருக்கவேண்டும்<br>- பிரிசெப்ட்ரின் சிபாரிசு தேவை.<br>- தொலைந்துவிட்ட அட்டைகளுக்கும், பழைய அப்யாசி அட்டைகளுக்கும், மாற்று அட்டை பெற அப்யாசிகள் விண்ணப்பம் செய்யலாம். |

வேறு எந்தவிதமான அடையாள அட்டையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேற்கூறிய அட்டைகளுக்கு விண்ணப்பிக்கவோ, அல்லது அவை சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கோ, அப்யாசிகள் உள்ளூர் மைய அங்கத்தினர்-ஒருங்கிணைப்பாளர் அல்லது மையப் பொறுப்பாளரை அணுக வேண்டும். உள்ளூர் மைய ஒருங்கிணைப்பாளர் தொகுதி ஒருங்கிணைப்பாளருடன் இணைந்து செயல் படுகிறார். உங்கள் தொகுதியின் அங்கத்தினர் ஒருங்கிணைப்பாளருடன் தொடர்பு கொள்வதற்கான விவரங்களை உங்கள் மண்டலப் பொறுப்பாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். மற்ற அனைத்துக் கேள்விகளுக்கும் விவரங்களுடன் in.idcard@srcm.org என்ற மின் அஞ்சல் முகவரிக்கு எழுதவும்.

**To subscribe to this Newsletter please visit http://www.srcm.org/centers/as/in/newsletter/index.jsp**
**For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2008 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved.
"Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.
This message may be edited for content and is intended exclusively for the members of SRCM.